தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு : 94436 99066

dinakani2023@gmail.com

www.dhinakani.com

நமது
# தினகனி
NAMADHU DHINA KANI

காலை நாளிதழ்




மலர் : 02 | இதழ் :209 | 4 - பக்கம் | 25.02.2025 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6




**தன்னைத்தான் காதல னாயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால்.**

விளக்கம்:
ஒருவன் தன்னைத் தான் விரும்பி வாழ்பவனாயின், தீய செயலாகிய பகுதியை எவ்வளவு சிறியதாயினும் பொருந்தாமல் நீங்க வேண்டும்.

## பிரதமர் நரேந்திர மோடி அரசு பாசிச அரசு அல்ல: மார்க்சிஸ்ட் கருத்துக்கு இந்திய கம்யூனிஸ்ட், காங்கிரஸ் கண்டனம்



குவஹாத்தி: "மின்னணு புரட்சி, புதுமை கண்டுபிடிப்பு, தொழில்நுட்பம் சார்ந்த வளர்ச்சி ஆகியவற்றை சார்ந்தே சர்வதேச முன்னேற்றம் உள்ளது" என தெரிவித்துள்ள பிரதமர் நரேந்திர மோடி, "உலகளாவிய நிச்சயமற்ற நிலையிலும் கூட, ஒன்று நிச்சயம் - அது இந்தியாவின் விரைவான வளர்ச்சி" என்று குறிப்பிட்டுள்ளார். அசாம் மாநிலம் குவஹாத்தியில் முதலீடு மற்றும் உள்கட்டமைப்பு உச்சிமாநாட்டை (Advantage Assam 2.0) பிரதமர் நரேந்திர மோடி இன்று (பிப். 25) தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் உரையாற்றிய பிரதமர் மோடி, "கிழக்கு இந்தியாவும், வடகிழக்கு இந்தியாவும் இன்று எதிர்காலத்திற்கான ஒரு புதிய பயணத்தைத் தொடங்குகின்றன. அசாமின் சிறப்பான திறன் மற்றும் முன்னேற்றத்தை உலக நாடுகளுடன் இணைக்கும் மாபெரும் முன்முயற்சியாக இந்நிகழ்ச்சி உள்ளது. இந்தியாவின் வளத்தில் கிழக்கு இந்தியா முக்கிய பங்கு வகித்து வருகிறது என்பதற்கு வரலாறு சாட்சியாக உள்ளது. தற்போது நாம் வளர்ச்சியடைந்த இந்தியாவை நோக்கி முன்னேறிச் செல்லும் போது, கிழக்கு இந்தியா மற்றும் வடகிழக்கு மாநிலங்கள் தங்களது உண்மையான திறனை வெளிப்படுத்தும். இத்தகைய பிரம்மாண்டமான நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்ததற்காக அசாம் அரசுக்கும், முதல்வருக்கும் பாராட்டுக்கள். அகரவரிசையில் அ என்றால் அசாம் என்று சொல்லிக்கொடுக்கும் காலம் வெகு தொலைவில் இல்லை என்று நான் 2013-ம் ஆண்டு கூறியிருந்தேன். உலகளாவிய நிச்சயமற்ற தன்மை இருந்தபோதிலும், நிபுணர்கள் ஒருமனதாக ஒரு உறுதியை ஒப்புக்கொள்கிறார்கள். அதுதான் இந்தியாவின் விரைவான வளர்ச்சி. இந்த நூற்றாண்டின் அடுத்த 25 ஆண்டுகளுக்கான தொலைநோக்குப் பார்வையுடன் இன்றைய இந்தியா செயல்பட்டு வருகிறது. இந்தியாவின் இளைஞர்கள்மீது உலக நாடுகள் அபரிமிதமான நம்பிக்கை வைத்துள்ளன. அவர்கள் வேகமாக திறன் மிக்கவர்களாகவும், புதுமையானவர்களாகவும் மாறி வருகிறார்கள். இந்தியாவின் புதிய நடுத்தர வகுப்பினர் மீதான நம்பிக்கை அதிகரித்து வருகிறது. புதிய விருப்பங்களுடன் அவர்கள் வறுமையிலிருந்து மீண்டு வருகிறார்கள். அரசியல் நிலைத்தன்மையையும், கொள்கைத் தொடர்ச்சியையும் இந்தியாவின் 140 கோடி மக்களும் ஆதரிக்கிறார்கள். இவ்விஷயத்தில் இந்திய மக்கள் மீது உலக நாடுகள் நம்பிக்கை வைத்திருக்கின்றன. சீர்திருத்தங்களை இந்தியா தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. இந்தியா தனது உள்ளூர் விநியோகச் சங்கிலிகளை வலுப்படுத்தி, பல்வேறு உலகளாவிய பிராந்தியங்களுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களில் இணைகிறது. கிழக்கு ஆசியாவுடனான வலுவான இணைப்பு மற்றும் புதிய இந்தியா-மத்திய கிழக்கு-ஐரோப்பா பொருளாதாரப் பெருவழித்தடம் ஆகியவை புதிய வாய்ப்புகளைக் கொண்டு வந்திருக்கின்றன.

## நடிகை ப்ரீத்தி ஜிந்தா Vs கேரள காங்கிரஸ் - வார்த்தைப் போரின் பின்னணி என்ன?



திருவனந்தபுரம்: 'பாலிவுட் நடிகை ப்ரீத்தி ஜிந்தாவின் ரூ.18 கோடி கடன் தள்ளுபடி செய்யப்பட்டதைத் தொடர்ந்து, பாஜகவிடம் அவரது சமூக வலைதளப் பக்கம் ஒப்படைக்கப்பட்டது' என கேரளா காங்கிரஸ் குற்றம்சாட்டியுள்ளது. இதற்கு நடிகை ப்ரீத்தி ஜிந்தா எதிர்வினையாற்றியதன் தொடர்ச்சியாக, இரு தரப்புக்கும் இடையில் வார்த்தைப் போர் மூண்டுள்ளது. கேரளா மாநில காங்கிரஸ் தமது சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்டிருந்த பதிவு ஒன்றில், 'கடந்த வாரம் வங்கி ஒன்று திவலான நிலையில், பாலிவுட் நடிகை தனது சமூக வலைதளப் பக்கத்தை பாஜக வசம் ஒப்படைத்துவிட்டு ரூ.18 கோடி கடன் தள்ளுபடி பெற்றுவிட்டார். வங்கியில் பணம் போட்டவர்கள் தங்களின் பணத்துக்காக வீதிகளில் இறங்கிப் போராடுகின்றனர்' என்று தெரிவித்து நடிகை ப்ரீத்தி ஜிந்தா குறித்த செய்தியைப் பகிர்ந்திருந்தது. கேரள காங்கிரஸின் இந்தக் குற்றச்சாட்டுக்கு உடனடியாக ப்ரீத்தி ஜிந்தா பதிலளித்திருந்தார். அதில், "என்னுடைய சமூக வலைதளப் பக்கத்தை நான்தான் கையாளுகிறேன். நீங்கள் இவ்வாறு போலிச் செய்திகளைப் பரப்புவது குறித்து நான் வெட்கப்படுகிறேன். யாரும் எனக்காக எந்தக் கடனையும் தள்ளுபடி செய்யவில்லை, வேறு எதுவும் செய்யவில்லை. ஓர் அரசியல் கட்சி அல்லது அவர்களின் பிரதிநிதிகள் இவ்வாறு போலிச் செய்திகள், மூன்றாம் தர கிசுகிசுக்களை பரப்புவது மிகவும் அதிர்ச்சி அளிக்கிறது. நீங்கள் குறிப்பிடும் அந்தக் கடன் 10 வருடங்களுக்கு முன்பே முழுமையாக திருப்பிச் செலுத்தப்பட்டுவிட்டது என்பதை தகவலுக்காகச் சொல்கிறேன். இந்த விளக்கம் எதிர்காலத்தில் தவறான செய்திகள் பரவுவதை தடுக்கும் என நம்புகிறேன்" என்று தெரிவித்திருந்தார்.

# பொறுத்தது போதுமடா, பொங்கி எழ வந்துள்ளேன்! - செல்லூர் ராஜூ பேச்சால் மதுரை மாநகராட்சி கூட்டத்தில் சலசலப்பு



மதுரை:பிப்-25 "பொறுத்தது போதுமடா, பொங்கி எழுவதற்கு வந்துள்ளேன்," என்று முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ மதுரை மாநகராட்சி கூட்டத்தில் கூறிய பின் திமுக கவுன்சிலர்கள் கூச்சலிட்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. மதுரை மாநகராட்சி கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜூ பேசுகையில், "நான் இன்று இந்த கூட்டத்துக்கு வந்தது, ஊர் சேர்ந்து நானும் தேர் இழுக்க வந்துள்ளேன். அரசியல் பேச வரவில்லை. சமீப நாட்களாக மாநகராட்சியை பற்றி வருகிற செய்திகளை பார்த்து பொறுத்தது போதுமடா பொங்கி எழு என்ற மனோகரா படம் வசனம் அடிப்படையில் வந்துள்ளேன். நான் பார்த்த அனுபவங்கள், கேள்விப்பட்டவற்றை சொல்கிறேன். கொஞ்சம் நேரம் பேசலாமா?" என்றார். அதற்கு மேயர் இந்திராணி, "தாராளமாக பேசலாம், உங்கள் கருத்து மட்டுமில்லை, அனைத்து கவுன்சிலர்கள் கருத்துகளையும் உள்வாங்கி அதை நிறைவேற்றுவதற்குதான் மாநகராட்சி உள்ளது," என்றார். தொடர்ந்து பேசிய செல்லூர் ராஜூ, "உயர் நீதிமன்றமே வருத்தப்படும் அளவுக்கு கோயில் மாநகரமான மதுரை, குப்பை நகரமாக மாறியுள்ளதாக வருத்தம் தெரிவித்துள்ளது," என்றார். அதற்கு திமுக கவுன்சிலர்கள், உயர் நீதிமன்றம் கூறிய இடம், மாநகராட்சிக்குட்பட்டது இல்லை என்று கூச்சலிட்டனர். அதற்கு செல்லூர் கே.ராஜூ, "முதலில் என்னைப் பேச விடுங்கள்" என்றார். அதற்கு மேயர் இந்திராணி, "தவறாக பேசக்கூடாது அல்லவா," என்றார். அதிமுக கவுன்சிலர்கள் எழுந்து, முன்னாள் அமைச்சர் பேசும்போது குறுக்கீடாதீர்கள் என்று பதில் கோஷமிட்டனர். தொடர்ந்து பேசிய செல்லூர் கே.ராஜூ, "எதற்கு சொல்கிறேன் என்றால், மதுரை சாலைகளில் என்னாலேயே செல்ல முடியவில்லை. இடுப்பு எலும்பு முடிந்துவிடும் போல் உள்ளது. சாலைகளில் குப்பைகள் குவிந்து தொற்று நோய் பரவுகிறது. நானே மாநகராட்சி அதிகாரிகளிடம் குறிப்பிட்ட இடங்களை சொல்லி சுட்டிக்காட்டினேன். ஒரு மாதத்திற்கு மேலாகியும் அகற்றப்படாமல் உள்ளது. அதைதான் இன்று உயர் நீதிமன்றமும் கூறியுள்ளது. மேயரும், ஆணையாளரும் பெண்கள். கவுன்சிலர்களிலும் 50 சதவீதம் பெண்கள். அவையில் பெண்கள் நிறைந்து இருப்பது, பெருமையாக உள்ளது. மதுரையில் மீனாட்சி கூட 6 மாதம்தான் ஆட்சி செய்வார். ஆனால், மேயர் நீங்கள் 5 ஆண்டுகள் ஆட்சி செய்கிறீர்கள். மதுரையை மேம்படுத்த வேண்டிய கடமையும், பொறுப்பும் உங்களிடம் உள்ளது. மதுரையில் 24 மணி நேரம் குடிநீர் வழங்கக்கூடிய பெரியாறு கூட்டுக்குடிநீர் திட்டம் எப்போதுதான் நிறைவேறும். எப்போது பார்த்தும், இப்போது வரும், அப்போது வரும் என்கிறார்கள். ஆனால், வந்தபாடுதான் இல்லை. 5,6 ஆணையாளர்கள் மாறிவிட்டார்கள். ஆணையாளரும், மேயரும் பெண்களாக உள்ளீர்கள். பெண்களுடைய இந்த குடிநீர் பிரச்சனையை தீர்க்க முயற்சி எடுக்க வேண்டும். 3 மாதத்திற்கு ஒரு முறை வார்டு பொறியாளர் அதிகாரிகளை மாற்றுகிறீர்கள். அவர்களுக்கு எப்படி வார்டின் பிரச்சனைகள் பற்றி தெரியும். சுகாதாரப் பணிகளை பெரியண்ணன் அடிப்படையில் ஒருவர் எடுத்துக் கொண்டு, தூய்மைப் பணியாளர்களை பாடாய் படுத்துகிறார்கள். வரி விதியில் பல்வேறு குறைபாடுகள் உள்ளதாக அமைச்சர் நேருவே சொல்லியுள்ளார். பெரிய பெரிய நிறுவனங்களிடம் வாங்க வேண்டிய வரியை இன்னும் வாங்காமல் உள்ளனர். வரியை வசூலிக்க மேயர் நீங்கள்தான் சாட்டையை சுழற்ற வேண்டும். மீனாட்சியம்மன் கோயில் அருகே சுற்றியுள்ள கட்டிடங்கள் உயரம், கோபுரத்தை காட்டிலும் குறைவாக இருக்க வேண்டும் என்ற விதி உள்ளது. இந்த விதியை பின்பற்றாத கட்டிடங்களை இடிக்கலாம். ஏன் மாநகராட்சி இந்த விஷயத்தில் தயக்கம் காட்டுகிறது. மதுரையில் உள்ள அனைத்து திட்டங்களும் அதிமுக ஆட்சியில் கொண்டு வரப்பட்டதுதான். அதுபோல், மதுரையில் இந்தந்த திட்டங்கள் உங்கள் ஆட்சியில் செய்தது என்று எதிர்காலத்தில் பெருமைப்படனும். நிர்வாகம் ரொம்ப மெதுவாக செல்கிறது," என்றார். அதற்கு மேயர் இந்திராணி, "உங்கள் தொகுதிக்குட்பட்ட ஒரு வார்டில் நானும், அமைச்சர் பழனிவேல் தியாகராஜனும் சமுதாயக் கூடத்தை திறந்து வைத்துவிட்டு வெளியெ வந்தபோது, உங்கள் பகுதி செயலாளர் ஒருவர் எங்களிடம் வந்து நாங்கள் 10 ஆண்டு செய்யாததை நீங்கள் செய்துள்ளீர்கள், இதுபோல் நிறைய செய்து கொண்டு இருக்கிறீர்கள் என்று பாராட்டினார். அப்படி உங்கள் கட்சியினரும் பாராட்டும்படிதான் எங்கள் ஆட்சி நடக்கிறது. அந்த வீடியோவை தங்கள் பார்வைக்கு அனுப்பி வைக்கிறேன். அதுபோல், ஒவ்வொரு முறையும் மேற்கு தொகுதிக்குள் நாங்கள் செல்லும்போதும், 10 ஆண்டு ரோடே போடல, உங்கள் ஆட்சியில்தான் ரோடு போட்டுள்ளீர்கள்," என்கின்றனர். நான் அரசியல் செய்ய வரவில்லை. அப்படி நீங்கள் சொன்னமாதிரி நான் மக்களுக்கு நல்லது செய்யாமல் இருந்திருந்தால், எப்படி மக்கள் 3 முறை அந்த தொகுதியில தேர்ந்தெடுத்து இருப்பார்கள்" என்று கூறியபடியே அங்கிருந்து புறப்பட்டு சென்றார். அப்போது திமுக - அதிமுக கவுன்சிலர்களிடையே கடும் வாக்குவாதமும், கூச்சலும் ஏற்பட்டது. 'தெர்மகோல்' திட்டத்துகது செல்லூர் ராஜூ புது விளக்கம் : செல்லூர் கே.ராஜூ கூறுகையில், "தற்போது கோடைகாலம் வருகிறது, குடிநீர் பற்றாக்குறை போக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுபோன்ற ஒரு கோடைகாலத்தில் வைகை அணையில் 18 அடிதான் தண்ணீர் இருந்தது. அப்போதைய பொதுப்பணித் துறை பொறியாளர்கள், மாவட்ட ஆட்சியர் சொல்லிதான், வறட்சியை சமாளிக்க வைகை அணையில் தண்ணீர் ஆவியாகுவதை தடுக்க தெர்மகோல் போடும் யோசனையை சொல்லினர். உலகத்தில் பல இடங்களில் இந்தத் திட்டம் இருப்பதாகவும் கூறினர். அதன்படிதான் அந்தத் திட்டத்தை நிறைவேற்றினோம். ஒரு அதிகாரி இப்படி சொன்னால் நீங்கள் செய்வீர்களா, மாட்டீர்களா? அதைதான் நானும் செய்தேன். கடைசியில் அதிகாரிகளை விட்டுவிட்டு, என்னை மட்டும் தெர்மகோல், தெர்மகோல் என்று ஓட்டுகிறார்கள்," என்றார்.

## 350 நாட்கள் தொடர்ந்து ஏழை எளிய மக்களின் பசியாற்றும் நட்சத்திர நண்பர்கள் அறக்கட்டளையின் தலைவர் குருசாமி



மதுரை: பிப்-25 அரசு ராஜாஜி மருத்துவமனையின் வெளிப்புறத்தில் நட்சத்திர நண்பர்கள் அறக்கட்டளையின் தலைவர் குருசாமி அவர்கள் தலைமையில் 350 நாட்கள் தொடர்ந்து ஏழை எளிய மக்களின் பசியை போக்கும் வண்ணம் அன்னதானத் திட்டம் நாள்தோறும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது, அதன் ஒரு பகுதியாக இன்று 350 ஆவது நாட்களை கொண்டாட்டும் விதமாக சுமார் 2000க்கும் மேற்பட்ட ஏழை, எளிய மக்களுக்கு நட்சத்திர நண்பர்கள் அறக்கட்டளையின் தலைவர் குருசாமி அவர்கள் தலைமையில் அன்னதானம் வழங்கப்பட்டது, இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக நடிகரும், இயக்குனரும்மான தருண் கோபி அவர்கள் கலந்து கொண்டு எளிய மக்களுக்கு உணவு மற்றும் பழங்கள் வழங்கினார், மேலும் இந்நிகழ்வில் நட்சத்திர நண்பர்கள் அறக்கட்டளையின் பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள், தொழில் அதிபர்கள் என பலர் கலந்து கொண்டனர்,

## முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் பிறந்த நாளை முன்னிட்டு குன்னூரில் அம்மா மக்கள் முன்னேற்ற கழகத்தினர் சார்பாக சிறப்பாக கொண்டாடினர்.



நீலகிரி:பிப்-25 முன்னால் முதல்வர் ஜெயலலிதாவின் 77வது பிறந்தநாள் விழா நேற்று தமிழகத்தில் கொண்டாடபட்டு வந்தது. இந்த விழாவை முன்னிட்டு, அமமுக தலைவர் மற்றும் பொதுசெயலாளர்கள் ஆகியோர்ஜெயலலிதாவின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி வந்தனர். அதே போல், தமிழகத்தில் பல்வேறு இடங்களில் அமமுக தொண்டர்கள் ஜெயலலிதா புகைப்படத்திற்கு மாலை அணிவித்தும், மலர் தூவியும் மரியாதை செலுத்தி வந்தனர். அதன்படி நீலகிரி மாவட்டம் குன்னூர் அமமுக குன்னூர் நகர கழக அலுவலகத்தில் அக்கட்சியின் மாவட்ட செயலாளர் கலைச்செல்வன் தலைமையில் நிர்வாகிகள் பலர் ஒன்றிணைந்து, அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த ஜெயலலிதாவின் திருவுருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர். தொடர்ந்து இனிப்புகள் வழங்கி பிறந்தநாள் விழாவை சிறப்பாக கொண்டாடினர்.

## மதுரை மாநகர் பகுதி தெப்பக்குளம் ரோட்டில் அமைந்துள்ள ீ ரீ பிரசன்னா வேங்கடேஷ்வரா மெட்ரிக் உயர்நிலையில் 42வது ஆண்டு சிலம்பம் கிரேண்ட் சேம்பியன்ஷிப் மாபெரும் உலக சாதனை - 2025ம் ஆண்டில் போட்டியில் இந்தியன் சிலம்பம் பள்ளி நடத்தும்




மதுரை:பிப்-25 சோழன் உலக சாதனை புத்தகம் (CBWR) இந்திய சிலம்ப பள்ளியின் மாபெரும் சிலம்ப போட்டியில் உலக சாதனை பெற்ற மதுரை மாவட்ட பள்ளிகளில் பயிலும் பல்வேறு மாணவர்களுக்கு SPVM பள்ளியில் பயிற்சி போட்டி ஒன்று முதல் 100 வரையும் 400 நிமிடங்கள் சிலம்ப சுற்று போட்டி நடைபெற்றது இதில் சிலம்பம் சுற்று பயிற்சியில் சிறப்பு பரிசாக மாணவ மாணவியர்க்கு கேடயம் மற்றும் உலகசாதனை வெற்றி சான்றிதழ் வழங்கபட்டு கௌரவிக்கபட்டது இதில் பெற்றோர்கள், ஆசிரிய பெருமக்கள் கராத்தே மாஸ்டர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர் இவ்விழாவில் சேர்மன் ஜெயராம், இந்திய சிலம்ப பள்ளி நிறுவனர் செயலாளர் மதுரை மாவட்ட சிலம்பச் சங்கம், கலை நன்மணி மாமல்லன் எஸ் .எம். மணி அட்வேகேட் நிறுவனர் / SMAA எஸ். மூவேந்தன் ஒருங்கிணைப்பாளர் கராத்தே கண்ணன் விழாவில் சிறப்பு ஏற்பாடு செய்திருந்தார் இணை செயலாளர் ஆர். கனிராஜா தலைமை ஆசான் எ.கரிகாலன், Noble World Records publishing Editor G மாரிமுத்து தலைமை தாங்கினார் ரெப்பரி C.ரமேஷ். கே. திவாகர் ஆகியோர் இவ்விழாவில் ஆசிரிய பெருமக்கள் ஏற்பாட்டில் கலந்து கொண்டு சிலம்பாட்ட மாணவ மாணவியர்களை மகிழ்வித்து பாராட்டி மகிழ்ந்தனர்.

# நெல்லை அரசு பள்ளி கட்டிடத்தில் தீ விபத்து: புத்தகங்கள் எரிந்து சேதம்

நெல்லை, பிப்.25

நெல்லை டவுன் பகுதியில் இயங்கி வரும் அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில், மாவட்ட தொடக்க கல்வி அலுவலகம், மாவட்ட உதவி தொடக்க கல்வி அலுவலருக்கான அலுவலகம் உள்பட கல்வித்துறை சார்ந்த பல்வேறு அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.




இந்நிலையில், இங்குள்ள மாவட்ட கல்வி அலுவலக கட்டிடத்தில் திடீர்தீவிபத்துஏற்பட்டது. இது தொடர்பாக தீயணைப்புத்துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நிலையில், தீயணைப்பு வீரர்கள்சம்பவஇடத்திற்கு விரைந்து வந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். பள்ளி வளாகத்திற்குள் உள்ள மற்ற கட்டிடங்களில் தீ பரவாத வகையில் தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்ததீவிபத்தில்நடப்பு ஆண்டு 10ம் வகுப்பு மாணவர்களுக்கான புத்தகங்கள் கட்டுக்கட்டாக எரிந்து சேதமடைந்தன. சம்பந்தப்பட்ட கட்டிடம் பாழடைந்த நிலையில் இருந்து வந்ததாகவும், அதனைசிலர்சட்டவிரோத செயல்களுக்கு பயன்படுத்திவந்ததாகவும் கூறப்படுகிறது. இது தொடர்பாக காவல்துறையினர் மற்றும் அரசு அதிகாரிகள் உரிய விசாரணை நடத்தி, தீ விபத்திற்கானகாரணத்தை கண்டறிய வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சேலம் மாநகர மாவட்ட அ. இ. அ.தி.மு.க சார்பில் ஜெயலலிதா பிறந்தநாள் விழா

இன்று முன்னாள் முதல்வர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அம்மா அவர்களின் 77வது பிறந்த தினத்தை முன்னிட்டு, சேலம் மாநகர மாவட்ட அ. இ. அ.தி.மு.க சார்பில் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. முன்னதாக சேலம் மாநகர மாவட்ட அ. இ. அ. தி.மு.க சார்பில் ஊர்வலம் நடைபெற்றது.தொடர்ந்து அ. இ. அ. தி. மு. க கொடி ஏற்றப்பட்டு அண்ணா பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள



முன்னாள் முதல்வர் புரட்சித்தலைவர் எம். ஜி.ஆர் மற்றும் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அம்மா அவர்களின் திருவுருவ சிலைகளுக்கு மாலை அணிவித்தனர் அதை தொடர்ந்து 77 வது பிறந்த நாளை நினைவுபடுத்தும்விதமாக 77 கிலோ கேக் வெட்டி கட்சி நிர்வாகிகளுக்கும் பொதுமக்களுக்கும் வழங்கங்கினர். பின்பு தொண்டர்களுக்கும், பொது மக்களுக்கும் இனிப்புகளை வழங்கினர். இதில் மாநில அமைப்பு செயலாளர் மற்றும் மாவட்ட பொறுப்பாளர் சிங்காரம் அவர்கள், மற்றும் மாவட்ட அ. இ. அ. தி. மு. க நிர்வாகிகள், சார்பு அணிகளின் பிரதிநிகள் கலந்து கொண்டு பிறந்தநாள் விழாவை சிறப்பித்தனர்

# இந்தி, சமஸ்கிருதத்தை திணிக்கும் ஒன்றிய பிஜேபி அரசை கண்டித்து திராவிடம் கழகத்தின் கண்டன ஆர்ப்பாட்டம்

இந்தி, சமஸ்கிருதத்தை திணிக்கும்ஒன்றியபிஜேபி அரசை கண்டித்து திராவிடம் கழகத்தின் கண்டன ஆர்ப்பாட்டம் இந்தி சமஸ்கிருதத்தை திணிக்கும்ஒன்றியபிஜேபி அரசை கண்டித்து சேலம் மாவட்டதிராவிடர்கழகம் சார்பாக இன்று கண்டன ஆர்ப்பாட்டம் சேலம் கோட்டை மைதானத்தில் நடைபெற்றது. இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தை திராவிடர் கழக சேலம் மாவட்ட தலைவர் வீரமணி ராஜு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மற்றும்



திராவிட கழகத்தைச் சேர்ந்த மாவட்ட செயலாளர் பூபதி, மாநில ஒருங்கிணைப்பாளர் ஊமை ஜெயராமன், மாநில ஒருங்கிணைப்பாளர் தகடூர் தமிழ்ச்செல்வி, மாரி கருணாநிதி, செல்லத்துரை, காயத்ரி, கஸ்தூரி மற்றும் திராவிட கழக தோழர்களும்,ம. தி.மு.கமாநகரசெயலாளர் அருள் மாது, த.மு.மு.க மாநில துணைச் செயலாளர் இப்ராஹிம், மாநகர மாவட்ட காங்கிரஸ் தலைவர் ARB.பாஸ்கர்,CPI மாவட்ட செயலாளர் மோகன், தமிழ் புலிகள் அமைப்பு உதய பிரகாஷ், ஊடகவியலாளர் அப்பாவுபுவனேஸ்வரி, மாவட்ட துணைத்தலைவர் திருமுருகன், ஆதித்தமிழர் பேரவை ATR சந்திரன் ஆகியோர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் உடன் பங்கு பெற்றனர்.


# திருப்பூர் மாவட்டத்தில் முன்னாள் முதல்வர் ஜெயல்லிதா பிறந்த நாள் விழா கொண்டாட்டம்



மாண்புமிகு முன்னாள் முதல்வர், புரட்சித்தலைவி டாக்டர் அம்மாஅவர்களின்77வது பிறந்த நாளை முன்னிட்டு திருப்பூர் புறநகர் மேற்கு மாவட்டம், பல்லடம் வடக்கு ஒன்றியம், 1.பூமலூர் ஊராட்சி நடுவேலம்பாளையம் கிளைக் கழகம் 2. மங்கலம் ஊராட்சி மங்கலம் கட்சி அலுவலகம் முன்புறம் 3. இச்சிப்பட்டி ஊராட்சி சிங்கப்பூர் நகர் கிளை கழகம் ஆகிய பகுதிகளில் பல்லடம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், பல்லடம் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் மரியாதைக்குரிய கரைப்புதூர் அ.நடராஜன் அவர்கள் கழக கொடி ஏற்றிவைத்து, இனிப்புகள் வழங்கினார்

இந்நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர் தண்ணீர் பந்தல் ப. நடராஜன், முன்னாள் ஒன்றிய கழகச் செயலாளர் சில்வர் வெங்கடாசலம், ஒன்றிய துணைச் செயலாளர் பரமசிவம், மாவட்ட சிறுபான்மையின பிரிவு செயலாளர் சிராஜுதீன், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் மங்கலம் முருகசாமி, பாலசுப்ரமணியம், சௌந்தர்ராஜன், கிட்டுசாமி, பருவாய் மாணிக்கம், நந்தகுமார், தங்கவேல், குமரவேல், மங்களம் முத்துச்சாமி சுப்பிரமணியம், சரவணக்குமார், முத்துக்குமார், செம்மிபாளையம் பரமசிவம், நாசர், வேலுச்சாமி, ராமசாமி, மூர்த்தி, பொன்னுச்சாமி, முருகன், குழந்தைவேல், சின்னத்தம்பி, நாராயணசாமி, நதியா வேல்முருகன், கோம்பைக்காடு சுப்பிரமணியம், சென்னியப்பன், ராமசாமி, கார்த்தி, ஈஸ்வரன், கிருஷ்ணமூர்த்தி கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்

# 9 கோவில்களில் மகா சிவராத்திரி விழா: அமைச்சர் சேகர்பாபு தகவல்



சென்னை, பிப்.25

தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலினின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னைகிழக்குமாவட்ட தி.மு.க. சார்பில், 2025 பிப்ரவரி 20ம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள்ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, காலை உணவுவழங்கும்"அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 4ம் நாளானநேற்றுதுறைமுகம் கிழக்கு பகுதி, மண்டலம்5, வார்டு60, மண்ணடி, செம்பு தாஸ் தெரு சந்திப்பு, மூக்கர் நல்லமுத்து தெரு மற்றும் அன்னை சத்யா நகர் பகுதியில் நேற்று இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு பொதுமக்கள் மற்றும் சிறுவர்களுக்கு காலை உணவு வழங்கினார்.

அதனை தொடர்ந்து செய்தி யாளர்களிடம் பேசிய அமைச்சர் சேகர்பாபு, "இந்து சமய அறநிலையத்துறை சார்பில் மகா சிவராத்திரி விழா கொண்டாடப்பட்டு வருகிறது. மயிலாப்பூரில் தொடங்கப்பட்ட மகா சிவராத்திரி விழா படிப்படியாக தற்போது இந்தாண்டு 9 கோவில்களில் கொண்டாடப்பட உள்ளது.

அதன்படி, வரும் 26ந்தேதி திருவண்ணாமலை அருணாச்சலேசுவரர், கோவை பட்டீஸ்வரசாமி, மயிலை கபாலீசுவரர், தஞ்சை பிரகதீஸ்வரர், நெல்லை, நெல்லையப்பர், திருவானைக்காவல் ஜெம்புகேஸ்வரர், மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர். திருவாரூர் தியாகராஜசாமி, திருவாலங்காடு வடாரண்யேஸ்வரசாமி ஆகிய கோவில்களில்மகா சிவராத்திரி சிறப்பாக கொண்டாடப்பட இருக்கிறது.

ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படும் மகாசிவராத்திரி விழாவினை கண்காணித்திட ஏதுவாக துறை அலுவலர்களை கொண்ட மதிப்பீட்டுக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன.

இக்குழுக்கள் கோவில்களில் மகா சிவராத்திரி விழாவிற்காக செய்யப்பட்டுள்ள பணிகளை ஆய்வு செய்து வழங்கும் மதிப்பெண்களின் அடிப்படையில் கோவில்களுக்கு பாராட்டு சான்று வழங்கப்படுகிறது.

மகா சிவராத்திரி நாளில் பக்தர்களுக்கு இடைவிடாது பிரசாதம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், பக்தர்களுக்கு தேவையான சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், அடிப்படைய வசதிகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் அனைத்தும் செய்து தரப்பட்டுவருகிறது" என்று அவர் கூறினார்.

# மேட்டூர் அருகே மேச்சேரி எரகுண்டபட்டி ஏரியை சுற்றுலா தலமாக அமைக்க அமைச்சரிடம் திமுக கவுன்சிலர் விமல் கோரிக்கை மனு

மேட்டூர் அருகே மேச்சேரி எரகுண்டபட்டி ஏரியை சுற்றுலா தலமாக அமைக்க அமைச்சரிடம் திமுக கவுன்சிலர் விமல் கோரிக்கைமனுஅடித்தார்.

மேட்டூர் அருகே மேச்சேரியில் எரகுண்டடபட்டியில் ஏரி உள்ளது. இப்பகுதி மக்களின் குடிநீர் மற்றும் விவசாய தேவையை இந்த ஏரி நீர் பூர்த்தி செய்து வருகிறது. தற்போது ஏரி முழுவதும்புதர்கள்மண்டி



காணப்படுகிறது. இந்நிலையில் மேச்சேரி சிறப்பு நிலை பேரூராட்சி 7வது வார்டு திமுக கவுன்சிலர் ஏ.விமல் சேலத்தில் மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் இ. ரா. இராஜேந்திரன், பி.ஏ.பில், அவர்களை சந்தித்து கோரிக்கை மனு அளித்தார். எர குண்ட பட்டி ஏரியை புனரமைத்து போட் ஹவுஸ் அமைக்கவும், சுற்றுலா தளமாக மாற்ற வேண்டும் என கோரிக்கை வைத்தார்.

# மேட்டூர் காவிரி ஆற்றில் அடையாளம் தெரியாத ஆண் சடலத்தை கைப்பற்றி போலீசார் விசாரணை

மேட்டூர் அருகே மாதையன்குட்டை காவிரி ஆற்றில் அடையாளம் தெரியாத ஆண் சடலம் ஒன்று மிதந்து கொண்டிருந்தது. இது குறித்து அப்பகுதி மக்கள் மேட்டூர் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்திற்குவந்தபோலீசார் சடலத்தை கைப்பற்றி



பிரேத பரிசோதனைக்காக மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இறந்துபோனநபருக்கு40 வயது இருக்கும் என போலீசார் தெரிவித்தனர். இறந்து போன நபர் யார் எந்த ஊரை சேர்ந்தவர் என்பது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பள்ளி மாணவிக்கு பாலியல் தொல்லை; சத்துணவு அமைப்பாளர் கைது

சிவகங்கை, பிப்.25

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் அருகே உள்ளகண்டரமாணிக்கம் இடும்பன் கோவில் தெருவை சேர்ந்தவர் சரவணன்(வயது 59). இவர்அரசுபள்ளிஒன்றில் சத்துணவு அமைப்பாளராக உள்ளார். இன்னும் 3 மாதத்தில் பணி ஓய்வு பெற உள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் பள்ளியில் படிக்கும் மாணவி ஒருவருக்கு சரவணன் பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். இதற்கிடையே பள்ளியில், பெண்கள் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்த வந்த அதிகாரிகளிடம் இதுகுறித்து அந்த மாணவி தெரிவித்துள்ளார். அவர்கள் இது தொடர்பாக மாவட்ட குழந்தைகள் நல பாதுகாப்பு அலுவலர் ஜோதியிடம் புகார் அளித்தனர். அவர் மாணவியிடம் விசாரணை நடத்தி னார். இதை தொடர்ந்து அவர் திருப்பத்தூர் அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் செய்தார். அதன்பேரில் போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து சரவணனை கைது செய்தனர். இந்தசம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# திருப்பூர் மாவட்டத்தில் முதல்வர் மருந்தகம் துவக்க விழா: மாவட்ட கலெக்டர் விற்பனையை துவக்கினார்

சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலகக் கலையரங்கில் கூட்டுறவுத்துறைசார்பில் தமிழ்நாடு முழுவதும் 1000 'முதல்வர் மருந்தகங்களை' மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு. க.ஸ்டாலின் அவர்கள் காணொலி வாயிலாக திறந்து வைத்து, விழாப் பேருரை ஆற்றினார்.




இதைத் தொடர்ந்து திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதி கந்திலி ஒன்றித்துக்குட்பட்ட காக்கன்கரை பகுதியில் முதல்வர் மருந்தகத்தை திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் #க_சிவசௌந்திரவல்லி அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழாவில் திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் மக்கள் செல்வர் மாண்புமிகு #A_நல்லதம்பி அவர்கள்



குத்து விளக்கு ஏற்றி வைத்தார். விற்பனையை தொடக்கி இதில் கூட்டுறவு சங்கம் அதிகாரிகள் கந்திலி ஒன்றிய குழு தலைவர் திருமதி திருமுருகன், திருப்பத்தூர் நகர கழக செயலாளர் ச.ராஜேந்திரன், கந்திலி ஒன்றிய கழக செயலாளர்கள் K.A.குணசேகரன், K.முருகேசன், K.S.A.மோகன்ராஜ், துணை தலைவர் G.மோகன்குமார் கழக நிர்வாகிகள் சுப்பிரமணி, சர்க்கரை, கருணாநிதி, குமார், சுகுமார், மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், கிளைக்கழகநிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள், பயனாளிகள், மற்றும் அரசு அதிகாரிகள் பெண்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டார்கள்.

# பள்ளி மாணவன் ஓட்டிய கார் மோதி வாசலில் கோலம் போட்டுக் கொண்டிருந்த பெண் உயிரிழப்பு

காஞ்சிபுரம், பிப்.25

காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு உட்பட்ட பெரிய காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவர் சரஸ்வதி (53 வயது).

இவர் நேற்று காலை நேரத்தில்வீட்டின்வாசல் முன்பு கோலம் போட்டுக்கொண்டு இருந்தார். அப்போது அப்பகுதியில் தன்னுடைய காரை ஆன் செய்தவாறு பிளஸ்2 படிக்கும் தனது 17 வயது மகனுடன் சேர்ந்து காரை சுத்தம் செய்யும் பணியில் அவரது தந்தை ஈடுபட்டு உள்ளார்.

அப்போது மாணவன் இயக்கிய கார் எதிர்பாராத விதமாக ஓடிச்சென்று கோலம் போட்டுக்கொண்டிருந்த சரஸ்வதி மீது மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் சரஸ்வதி உடல் நசுங்கி சம்பவ இடத்திலேயே துடி, துடித்து பரிதாபமாக பலியானார்.இச்சம்பவம் குறித்து தகவல் அறிந்து விரைந்துவந்தசிவகாஞ்சி போலீசார் விபத்தில் உயிரிழந்த சரஸ்வதியின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் விபத்து குறித்து சிவகாஞ்சி போலீசார் வழக்குப்பதிவு செய்து மாணவனையும், அவரது தந்தையையும் கைது செய்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

வீட்டு வாசலில் கோலம் போட்டுக்கொண்டிருந்த பெண் மீது மாணவன் இயக்கிய கார் மோதி பலியான சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# கன்னியாகுமரி: திடீரென வீட்டின் சுற்றுச்சுவர் மீது மோதிய லாரி... அதிர்ச்சி வீடியோ

கன்னியாகுமரி பிப்.25

கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து கனிம வளங்களை ஏற்றிக்கொண்டு கேரளாவிற்கு லாரி ஒன்று சென்று கொண்டிருந்தது. இந்நிலையில் லாரி ஆற்றூர்அருகேதேமானூர் பகுதியில் சென்றுகொண்டிருந்தது .




அப்போது கட்டுப்பாட்டை இழந்த லாரி சாலை அருகே இருந்த புருஷோத்தமன் என்பவர் வீட்டின் சுற்றுச்சுவர்மீதுமோதியது. லாரி மோதிய வேகத்தில் சுவர் இடிந்து விழுந்ததில் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 2 பைக்கும் சேதமடைந்தன.

இந்த விபத்து குறித்து தகவலறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். இது குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இதனையடுத்து விபத்து குறித்த சிசிடிவி காட்சிகள் வெளியாகி உள்ளது.

# தமிழக மீனவர்களை கைது செய்யும் இலங்கை கடற்படையினரை மத்திய அரசு கண்டிக்க வேண்டும்: ஜி.கே.வாசன்

சென்னை, பிப்.25

த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது,

தமிழ்நாட்டைச் சேர்ந்த 32 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட சம்பவம் மீனவர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தமிழக மீனவர்களை கைது செய்யும் இலங்கை கடற்படையினரை மத்திய அரசு கண்டிக்க வேண்டும்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக, இலங்கை கடற்படையினரால் தொடர்ந்து கைது செய்யப்படுவது வாடிக்கையாகிவிட்டது. இது வேதனைக்குரியது. அந்த வகையில் இப்போது தமிழ்நாட்டைச் சேர்ந்த மேலும் 32 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.



ராமநாதபுரம் மாவட்டம் ராமேசுவரத்தைச் சேர்ந்த மீனவர்கள், மீன்பிடி துறைமுகத்தில் இருந்து சென்று வழக்கம்போல் நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர், தமிழக மீனவர்கள் எல்லைதாண்டி மீன்பிடித்ததாக 32 பேரையும் கைது செய்துள்ளனர். மேலும் அவர்கள் பயன்படுத்திய 5 விசைப்படகுகளையும் பறிமுதல் செய்துள்ளனர்.

இதனால் ராமேஸ்வரம் பகுதி மீனவக்குடும்பங்கள் மிகுந்த கவலை அடைந்துள்ளனர். காரணம் வருமானம் ஈட்ட முடியாமல், வாழ்வாதாரத்தை இழக்கக்கூடிய நிலைக்கு தள்ளப்படுகின்றனர். குறிப்பாக அண்மையில் தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படை நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்தார். அது பெரும் பிரச்னையாக வெடித்தது. அதனை கண்டித்து தமிழக மீனவர்கள் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

இந்நிலையில், மேலும் 32 தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர். இதற்குகாரணம்இலங்கை அரசின் முறையற்ற நடவடிக்கைகள் தான். எனவே மத்திய அரசு, இலங்கை அரசுடன் தொடர்பு கொண்டு கைது செய்யப்பட்டுள்ளதமிழகமீனவர்கள் 32 பேரை விடுவிக்கவும், அவர்களின் 5 விசைப்படகுகளை ஒப்படைக்கவும் வலியுறுத்த வேண்டும். தமிழகஅரசும்தமிழக மீனவர்களின்மீன் பிடித்தொழிலைப் பாதுகாக்கும் விதமாகநடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலும் மத்திய அரசு, தமிழக மீனவர்களின் மீன் பிடித் தொழில் இலங்கை கடற்படையினரால்பாதிக்கப்படக்கூடாது என்பதற்கு ஏற்ப இலங்கை அரசுடன் கண்டிப்போடு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று தமிழ் மாநில காங்கிரஸ்(மூ) சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மாண்புமிகு முன்னாள் முதல்வர், புரட்சித்தலைவி டாக்டர் அம்மா அவர்களின் 77வது பிறந்த நாளை முன்னிட்டு திருப்பூர் புறநகர் மேற்கு மாவட்டம், பல்லடம் வடக்கு ஒன்றியம்,பூமலூர் ஊராட்சி பூமலூர் கிளைக் கழகத்தின் சார்பில் பல்லடம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், பல்லடம் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் மரியாதைக்குரிய கரைப்புதூர் அ.நடராஜன் அவர்கள் கழக கொடி ஏற்றி வைத்து, அன்னதானம், வழங்கினார்இ நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர் தண்ணீர் பந்தல் ப. நடராஜன் ஒன்றிய துணைச் செயலாளர் பரமசிவம்,வேலுச்சாமி,ராமசாமி,மூர்த்தி,பொன்னுச்சாமி,ராமச்சந்திரன்,கந்தசாமி,சுப்பிரமணி,முருகன்,குழந்தைவேல்,சின்னத்தம்பி, நாராயணசாமி, பொன்னுச்சாமி, பழனிச்சாமி, மகேஷ் மருதாச்சலம் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்

# அரசு ஊழியர்களின் கோரிக்கைகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க அமைச்சர்கள் அடங்கிய குழு அமைப்பு

சென்னை, பிப்.25

தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சங்கங்களின் பல்வேறு கோரிக்கைகளை பரிசீலித்து அதன் மீது உரிய நடவடிக்கை எடுக்க அமைச்சர்கள் அடங்கிய குழுவை அமைத்து முதல் அமைச்சர்மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்

இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:




பல்வேறு தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சங்கங்களின் கோரிக்கைகளை பரிசீலித்து அவற்றின் மீது உரிய முடிவுகளைகாணும் பொருட்டு அமைச்சர்கள் அடங்கிய ஒரு குழுவினை அமைத்துமுதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இந்தக் குழுவில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி மற்றும் மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். அரசுஊழியர்சங்கங்களின் கோரிக்கைகள் குறித்து சங்க நிர்வாகிகளுடன் நாளை (திங்கட்கிழமை) தலைமை செயலகத்தில் அமைச்சர்கள் பேச்சுவார்த்தை நடத்த உள்ளனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பொள்ளாச்சி ரெயில் நிலையத்தில் இந்தி எழுத்துக்கள் அழிக்கப்பட்ட விவகாரம்: 5 பேர் மீது வழக்குப்பதிவு

கோவை, பிப்.25

மத்திய அரசின் புதிய தேசிய கல்விக்கொள்கை மற்றும் அதில் இருக்கும் மும்மொழிக் கொள்கை ஆகியவற்றை ஏற்கமாட்டோம் என்ற நிலைப்பாட்டில் தமிழ்நாடு அரசு உறுதியாக உள்ளது. ஆனால், தேசிய கல்விக் கொள்கையை அனைத்து மாநிலங்களிலும் அமல்படுத்துவதில் மத்திய அரசு உறுதியாக உள்ளது.

மும்மொழிக் கொள்கை வழியாக மத்திய அரசு இந்தியை திணிப்பதாக தெரிவித்து திமுக போராட்டங்களை முன்னெடுத்துள்ளது. அதேபோல, அதிமுக, விசிக, தவெக உள்ளிட்ட




கட்சிகளும்மத்தியஅரசின் தேசிய கல்விக் கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

இந்த நிலையில் இந்தி திணிப்புக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், திமுகவை சேர்ந்த 5 பேர், கோவை மாவட்டம் பொள்ளாச்சி ரெயில் நிலையத்தில் பெயர் பலகையில் உள்ள இந்தி எழுத்துக்களை கருப்பு மையால் அழித்தனர். தமிழ், இந்தி,

ஆங்கிலம் என்று மூன்று மொழிகளில் 'பொள்ளாச்சி சந்திப்பு' என எழுதப்பட்டு இருந்த நிலையில், நடுவில் இருந்த இந்தி எழுத்தை மட்டும் அவர்கள் அழித்தனர். இதனால் அந்த பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இது தொடர்பாக தகவல் அறிந்து அங்கு சென்ற ரெயில்வே போலீசார் அதிர்ச்சியடைந்தனர். இதையடுத்து, 3 மணி நேரத்தில் இந்தி எழுத்துக்களை அழித்த அதே பெயர் பலகையில் மீண்டும் இந்தியில் பெயர் எழுதப்பட்டது. பெயர் பலகையில் இந்தி எழுத்துக்களை அழித்த திமுகவை சேர்ந்த 5 பேர் மீது 3 பிரிவுகளின் கீழ் பாலக்காடு ரெயில்வே பாதுகாப்பு படையினர் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மீனவர்கள் கைது: இலங்கை கடற்படையினர் அத்துமீறலுக்கு முடிவு கட்டவேண்டும் அன்புமணி ராமதாஸ்

சென்னை, பிப்.25

பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

வங்கக் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த ராமேஸ்வரம் மீனவர்கள் 32 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். அவர்கள்மீன்பிடிக்கச் சென்ற 5 விசைப்படகுகள் இலங்கை கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தொடர்ந்து நடத்தி வரும் அத்துமீறல் கடுமையாக கண்டிக்கத்தக்கது.

தமிழ்நாட்டு மீனவர்கள் வங்கக் கடலில் எல்லைத் தாண்டி மீன்பிடிக்கும் விவகாரத்தை வாழ்வாதாரம் சார்ந்த மனிதநேய பிரச்சினையாகத்தான் பார்க்க வேண்டும் என்று கடந்த அக்டோபர் 29ஆம் தேதிநடைபெற்றஇந்தியா இலங்கை மீனவர் நலனுக்கான கூட்டுப்பணிக் குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. அண்மையில் இந்தியா வந்த இலங்கை அதிபர் அநுரகுமார திசநாயக்க இந்தியப்பிரதமர்நரேந்திர மோடியுடன் நடத்திய பேச்சுக்களின்போது இதே நிலைப்பாடுதான் எடுக்கப்பட்டது. ஆனால், இலங்கை கடற்படையினர் இவற்றை மதிக்காமல், தமிழ்நாட்டு மீனவர்கள் ஏதோ எல்லை தாண்டிய பயங்கரவாதத்தில் ஈடுபட்டதைப் போன்று கைது செய்து சிறையில் அடைப்பதை வாடிக்கையாக



வைத்திருக்கிறார்கள். இது இந்தியாவின் இறையாண்மைக்கு விடப்படும்சவால் ஆகும்.

தமிழக மீனவர்கள் மீதான இலங்கை படையினரின் தாக்குதல் மற்றும் கைது நடவடிக்கையை தடுத்து நிறுத்த தமிழக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மத்திய அரசுக்கு கடிதம் எழுதுவதுடன் தமது கடமைமுடிந்துவிட்டதாக முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் நினைக்கிறார். இந்த நிலைப்பாடு தவறு. மத்தியஅரசைவலியுறுத்தி மீனவர் சிக்கலுக்கு நிரந்தர தீர்வுகாண தமிழக அரசுதான் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மத்திய அரசும் இந்த விவகாரத்தை இந்தியாவின் இறையாண்மை மீது நடத்தப்பட்ட தாக்குதலாகக் கருதி, இலங்கை அரசை கடுமையாக எச்சரிக்க வேண்டும். இந்தியா இலங்கை மீனவர் நலனுக்கான கூட்டுப் பணிக்குழு கூட்டத்தை உடனடியாக மீண்டும் கூட்டி அதில் தமிழக மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பது குறித்து விவாதிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தெருநாய்கள் கடித்து உயிரிழக்கும் ஆடுகளுக்கு இழப்பீடு வழங்க நடவடிக்கை அமைச்சர் முத்துசாமி தகவல்

ஈரோடு பிப்.25

ஈரோடு மாவட்டம் சென்னிமலை அடுத்த மேலப்பாளையம் அருகே இரும்பு வலைகளால் செய்யப்பட்ட புதிய ஆட்டுப்பட்டியை வீட்டு வசதித்துறை அமைச்சர் முத்துசாமி பார்வையிட்டார்.



தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய அவர், தெருநாய்கள் கடித்து உயிரிழக்கும் ஆடுகளுக்கு இழப்பீடு வழங்கும் ஆணைக்கான கோப்புகள் முதல் அமைச்சரிடம் உள்ளதாகவும், தெருநாய்கள் கடித்து உயிரிழந்த ஆடுகளுக்கு இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

# சென்னை பத்மாவதி தாயார் கோவிலில் பிரம்மோற்சவம் சூரிய பிரபை வாகன சேவை

சென்னை, பிப்.25

சென்னை தி.நகரில் திருமலை திருப்பதி தேவஸ்தான நிர்வாகத்திற்குட்பட்ட பத்மாவதி தாயார் கோவிலில் வருடாந்திர பிரம்மோற்சவ விழா நடைபெற்று வருகிறது. தினமும் உற்சவ தாயார், வாகனங்களில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்.

அவ்வகையில், இன்று சூரிய பிரபை வாகனத்தில் தன்வந்திரி பகவான் அலங்காரத்தில் தாயார் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.



சூரிய பிரபை வாகனத்தில் தாயாரை தரிசனம் செய்வது, அமைதியான வாழ்க்கைக்கு அவசியமான ஆரோக்கியம், செல்வம், செழிப்பு, ஞானம் ஆகிய பலன்களை அளிக்கும் என பக்தர்களிடையே நம்பிக்கை உள்ளது.

# இந்தில கவிதை சொல்லு..,மாணவரை அடித்த ஆசிரியை...பள்ளி நிர்வாகம் எடுத்த அதிரடி முடிவு

சென்னை, பிப்.25

மத்திய அரசின் மும்மொழி கொள்கையை ஏற்றுக் கொள்ளவில்லை என்றால், தமிழ்நாட்டிற்கு கொடுக்கப்பட வேண்டிய ரூ.2,152 கோடி தொகையை விடுவிக்க மாட்டோம் என்று மத்திய மந்திரி தர்மேந்திர பிரதான் தெரிவித்தார். இதற்கு தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் கடும் எதிர்ப்பை தெரிவித்து வருகின்றன. பாஜகவை தவிர்த்து அத்தனை கட்சிகளும் இந்தி திணிப்புக்கு எதிராக குரல் கொடுத்து வருகின்றன.

இந்த நிலையில் சென்னையில் உள்ள தனியார் பள்ளி ஒன்றில் இந்தியில்கவிதைசொல்ல முடியாமல் திணறிய மாணவரை இந்தி ஆசிரியை கடுமையாக அடித்து தாக்கிய சம்பவம் அரங்கேறி உள்ளது. சென்னை கீழ்ப்பாக்கம் பகுதியில் தனியார் பள்ளி செயல்பட்டு வருகிறது. இந்தப் பள்ளியில் பத்மலட்சுமி (வயது38 ) என்பவர்இந்திஆசிரியராக பணியாற்றி வருகிறார். இந்தப் பள்ளியில் தமிழ், ஆங்கிலம் மற்றும் இந்தி ஆகிய பாடங்கள் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. இந்த நிலையில் 3வது வகுப்பைச் சேர்ந்த மாணவர் ஒருவருக்கு இந்தி கற்பதிலும், படிப்பதிலும் சில சிக்கல்கள் இருந்திருக்கின்றன.

இந்த சூழலில் 3வது வகுப்பு மாணவரை இந்தியில் கவிதை சொல்லுமாறு பத்மலட்சுமி கூறி இருக்கிறார். அப்போது அந்த மாணவர் இந்தியில் கவிதை சொல்ல முடியாமல் திணறியதாக கூறப்படுகிறது. இதனால் கோபடைந்த அந்த ஆசிரியை மாணவரை கடுமையாக அடித்திருக்கிறார். அதுமட்டுமல்லாமல் பள்ளிக்குள் விடமாட்டேன் என்றும் மிரட்டி தொடர்ந்து அடித்துள்ளார்.

இந்த சம்பவம் குறித்து அந்த மாணவரின் பெற்றோருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. உடனடியாக இந்தி ஆசிரியை மீது பள்ளி நிர்வாகத்திடம் பெற்றோர் புகார் அளித்துள்ளனர். இதனைத் தொடர்ந்து இந்தி ஆசிரியை பத்மலட்சுமி சஸ்பெண்ட் செய்து பள்ளி நிர்வாகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதன் காரணமாக இந்த சம்பவம் மக்களிடையே விவாதபொருளாக மாறி உள்ளது.

# காதல் திருமணம் செய்த இளம்பெண், கணவர் வெளிநாடு செல்வது பிடிக்காமல் தற்கொலை



விழுப்புரம், பிப்.25

விழுப்புரம் மாவட்டம் கோட்டக்குப்பம் அடுத்த சின்னமுதலியார்சாவடி சுனாமி குடியிருப்பை சேர்ந்தவர் முருகன். மீனவர். இவருடைய இளைய மகள் முத்தரசி (வயது 23). இவர், செல்போன் மூலம் ஏற்பட்ட தொடர்பில் கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் பகுதியை சேர்ந்த லட்சுமணன் (30) என்பவரை காதலித்து வந்தார். இருவரும் வெவ்வேறு சமூகம் என்பதால்திருமணத்திற்கு லட்சுமணன் வீட்டில் சம்மதிக்கவில்லை.

இந்நிலையில் கடந்த 4 மாதத்திற்கு முன்பு தர்மபுரியில் உள்ள லட்சுமணனின் குலதெய்வ கோவிலில் முத்தரசியை அவர் திருமணம் செய்து கொண்டார். திருமணத்திற்கு பின்னர் கணவன், மனைவி இருவரும் சுனாமி குடியிருப்பில் முத்தரசியின் பெற்றோருடன் வசித்து வந்தனர். இதற்கிடையில் லட்சுமணனுக்கு, குவைத் நாட்டில் வேலை பார்ப்பதற்காக அழைப்பு வந்தது. இதனால் லட்சுமணன் அதற்கான ஏற்பாடுகளை செய்து வந்தார். இதற்காக பாஸ்போர்ட், விசா எடுத்த அவர் குவைத் நாட்டில் வேலை செய்ய போகும் கம்பெனியின் கிளை அலுவலகம் உள்ள மும்பைக்கு கடந்த சில நாட்களுக்கு முன்பு சென்றுள்ளார்.

கடந்த ஒரு வாரமாக காதல் கணவரை பிரிந்து இருந்த முத்தரசி, அவரை அவ்வப்போது தொடர்பு கொண்டு வெளிநாடு செல்ல வேண்டாம் என கூறிவந்துள்ளார். அவரை பெற்றோர் சமாதானம் செய்து வந்தனர். இந்நிலையில் நேற்று காலை தந்தை முருகனுக்கு சாப்பாடு கொடுத்து விட்டு மாடி பகுதியில் உள்ள கீற்று கொட்டகைக்கு சென்ற முத்தரசி நீண்ட நேரம் ஆகியும் கீழே வரவில்லை. பின்னர் மாடியில் சென்று பார்த்தபோது அங்கு முத்தரசி சேலையால் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இது குறித்து கோட்டக்குப்பம்போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் ராஜு தலைமையிலான போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இதனிடையே மும்பையில் உள்ள முத்தரசியின் கணவர் லட்சுமணனும் சம்பவம் குறித்து அறிந்ததும் ஊர் திரும்பி வருகிறார். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியது.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253



## நீலகிரி மாவட்டம் குன்னூரில் மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 77 வது பிறந்தநாள் விழா செண்டை மேளம் முழங்க ஊர்வலமாக வந்த அதிமுகவினர் ஜெயலலிதா உருவப்படம் முன் கேக் வெட்டி இனிப்புகளை வழங்கி பிறந்தநாள் கொண்டாடப்பட்டது.



நீலகிரி:பிப்25 தமிழகம் எங்கும் மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் பிறந்தநாள் இன்று கொண்டாடப்பட்டு வரும் நிலையில் நீலகிரி மாவட்டம் குன்னூரில் அதிமுக மாவட்ட செயலாளர் கப்பச்சி வினோத் தலைமையில் கொண்டாடப்பட்டது குன்னூர் லாலி அரசு மருத்துவமனை பகுதியில் அதிமுக கொடியேற்றி அங்கிருந்து அதிமுகவினர் பலூன்களால் அலங்கரிக்கப்பட்ட ஜெயலலிதாவின் உருவப்படத்துடன் மவுண்ட் ரோடு வழியாக செண்டை மேளம் வாங்க ஊர்வலம் வந்தனர். பின்பு அண்ணா சிலை அருகே அலங்கரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்த ஜெயலலிதாவின் உருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர் பின்பு 77 வது பிறந்த நாளை ஒட்டி 77 கிலோ கேக் வெட்டி அனைவருக்கும் வழங்கப்பட்டது இதனை தொடர்ந்து ஏழைகளுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சாந்தி ராமு மற்றும் மாநில இளைஞரணி துணைச் செயலாளர் பாலநந்தகுமார் குன்னூர் நகர செயலாளர் சரவணன் மற்றும் கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் மகளிர் அணியினர்கலந்து கொண்டனர்.

## இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் 77 வது பிறந்தநாள் விழா கொண்டாட்டங்கள்



திருப்பூர்:பிப்-25 புறநகர் கிழக்கு மாவட்டச் கழக செயலாளர், மடத்துக்குளம் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு அண்ணன் திரு C.மகேந்திரன் M.A,MLA அவர்களின் ஆலோசனைப்படி மாவட்ட கழகப் பொருளாளர் திரு சின்னப்பன் (எ) பழனிசாமி அவர்கள் முன்னிலையில் தாராபுரம் நகர கழக செயலாளர் அண்ணன் திரு C ராஜேந்திரன் B.E., அவர்களின் தலைமையில் இன்று 24/2/2025 காலை 9:30 மணி அளவில் வடதாரையிலிருந்து ஊர்வலமாக வந்து அண்ணா சிலையின் முன் அமைக்கப்பட்டுள்ள தங்கத் தாரகை புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி இனிப்புகள் வழங்கி பிறந்தநாள் கொண்டாட்டங்கள் இனிதே கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் திரு GR பாலகுமாரன் அவர்கள், தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் திரு ரமேஷ் அவர்கள், கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் திரு செல்வகுமார் அவர்கள், குளத்து பாளையம் பேரூர் கழக செயலாளர் திரு பைப் ரவி அவர்கள், அமைப்புசாரா ஓட்டுனர் அணி மாவட்ட செயலாளர் திரு பங்க் மகேஷ் அவர்கள், மாவட்ட அம்மா பேரவை பொருளாளர் திரு அரசகுமார் அவர்கள், நகர மகளிர் அணி செயலாளர் திரு கௌரிசித்ரா முருகேசன் அவர்கள், மாவட்ட இளைஞர் அணி செயலாளர் திரு. ஆதித்யன், மாவட்ட மாணவர் அணி துணை செயலாளர் திரு ஜஹீர் அப்பாஸ், தகவல் தொழில்நுட்ப பிரிவு நகர செயலளர் திரு. திலிப் ஸ்ரீனிவாசன் அவர்கள், மாவட்ட அண்ணா தொழிற்சங்க தலைவர் திரு பழனிக்குமார் அவர்கள், மேலும் இந்நிகழ்வில் மாவட்ட கழக செயலாளர்கள், நிர்வாகிகள்,நகரக் கழக ஒன்றிய கழக, பேரூர் கழக - செயலாளர்கள் ,நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள், சார்பு அணி மாவட்ட,நகர, ஒன்றிய செயலாளர்கள்-நிர்வாகிகள், வார்டு கழக , கிளை கழக செயலாளர்கள்-நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள், கழக செயல் வீரர்கள் , வீராங்கனைகள் மற்றும் கழகத் தொண்டர்கள் அனைவரும் அணி திரளாக கலந்து கொண்டனர்.

## மும்மொழிக் கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆண்டிபட்டியில் திமுக கண்டன பேரணி.




தமிழகம் முழுவதும் திமுக தலைமை மும்மொழி கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து 24ம் தேதி கண்டன பேரணி நடைபெறும் என அறிவித்திருந்தது. இதன் ஒரு பகுதியாக ஆண்டிபட்டி ஒன்றிய திமுக சார்பில் ஆண்டிபட்டியில் மும்மொழி கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து, திமுகவினர் கண்டன பேரணியில் கலந்துகொண்டு ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர். வைகை அணை சாலை பிரிவு அருகே உள்ள திமுக அலுவலகத்தில் இருந்து ஆண்டிபட்டி கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜாராம் தலைமையில் நூற்றுக்கும் மேற்பட்ட திமுகவினர் ஆண்டிபட்டி நகரில் மதுரை சாலை வழியாக வந்து பேருந்து நிலையம் வந்து அடைந்தனர். கண்டனப் பேரணியில் ஹிந்தி எதிர்ப்பு, மும்மொழிகொள்கை, வேண்டாம் உள்ளிட்ட பதாதைகளுடன் கலந்து கொண்டு கண்டன கோஷங்களை எழுப்பினார்கள். இதையடுத்து ஆண்டிபட்டி பேருந்து நிலையம் முன்பாக மத்திய அரசிற்கு எதிராக கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் நகர் கழகச் செயலாளர் பூஞ்சோலை சரவணன், முன்னாள் எம்.எல்.ஏ. ஆசையன், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் ஜி.கே. பாண்டியன் ,மாணவரணி மாவட்ட அமைப்பாளர் பிரகாஷ் ,மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் சேது ராஜா, நிர்வாகிகள் சிவா ,அர்ஜுன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## காரைக்குடியில் மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பிறந்த நாள் விழா




காரைக்குடி, பிப்.25- காரைக்குடியில் மறைந்த தமிழக முதல்வர் ஜெயலலிதா பிறந்தநாள் தினத்தையொட்டி அதிமுக ஓ.பி.எஸ்.,அணி சார்பில் சிவகங்கை மாவட்ட செயலாளர் கே.ஆர்.அசோகள் தலைமையில் புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள தேவர் சிலையில் துவங்கிய ஊர்வலம் பெரியார் சிலை வழியே வந்து ஐந்து விளக்கு பகுதியில் அமைந்துள்ள எம் ஜி ஆர் சிலைக்கு வந்தடைந்தது. பின்னர் ஜெயலலிதா திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து , மலர் தூவி மரியாதை செலுத்தினர். பொதுமக்களுக்கு இனிப்பு இனிப்பு வழங்கினர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட அம்மா பேரவை செயலாளர் பாலா, காரைக்குடி வடக்கு நகர செயலாளர் சோ.ரவி, தெற்கு நகர செயலாளர் அங்குராஜ், தகவல் தொழில் நுட்ப அணி கணேஷ் பாபுமாவட்ட இளைஞரணி செயலாளர் சுந்தர பாண்டியன் தொகுதி கழகச் செயலாளர் பழனி இளையான்குடி ஒன்றிய கழக செயலாளர் கிருஷ்ணபிரபு கல்லல் ஒன்றிய கழக செயலாளர் சண்முகசுந்தரம் முருகேசன், உள்பட கட்சி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## 3 வாரங்கள் மன அழுத்தத்தில் இருந்தேன் - லால் சிங் சத்தா தோல்வி குறித்து ஆமிர் கான்



மும்பை: என் படம் தோல்வியடையும்போது, நான் இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்கு மன அழுத்தத்துக்குள் சென்று விடுவேன். அதன் பிறகு நான் என்னுடைய குழுவினருடன் அமர்ந்து என்ன தவறு நடந்தது என்று விவாதித்து அதிலிருந்து கற்றுக் கொள்வேன் என்று நடிகர் ஆமிர் கான் தெரிவித்தார். இதுகுறித்து தனியார் ஊடக நிகழ்வு ஒன்றில் பேசிய ஆமிர்கான், "என்னுடைய படங்கள் தோல்வி அடைந்தால் நான் வருத்தம் அடைவேன். காரணம் ஒரு படத்தை எடுப்பது கடினமானது. சில நேரம் நாம் திட்டமிட்டது போல் எதுவும் நடப்பதில்லை. 'லால் சிங் சத்தா' படத்தில் என்னுடைய நடிப்பு சற்று மிகையாக இருந்தது. அந்த படம் முழுக்க ஹீரோவின் நடிப்பை சார்ந்த ஒரு படம். டாம் ஹாங்க்ஸின் 'ஃபார்ரஸ்ட் கம்ப்' படத்தை போல அது வரவேற்பை பெறவில்லை. என் படம் தோல்வியடையும்போது, நான் இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்கு மன அழுத்தத்துக்குள் சென்று விடுவேன். அதன் பிறகு நான் என்னுடைய குழுவினருடன் அமர்ந்து என்ன தவறு நடந்தது என்று விவாதித்து அதிலிருந்து கற்றுக் கொள்வேன். எனது தோல்விகளை நான் உண்மையிலேயே மதிக்கிறேன். அவைதான் நான் இன்னும் சிறப்பாக செயல்பட தூண்டுகின்றன" இவ்வாறு ஆமிர் கான் தெரிவித்தார். ஹாலிவுட்டில் வெளியான 'ஃபாரஸ்ட் கம்ப்' படத்தின் இந்தி ரீமேக் 'லால் சிங் சத்தா'. பெரும் பொருட்செலவில் உருவான இப்படத்தில் ஆமிர்கான், கரீனா கபூர் நடித்திருந்தனர். 2022ல் வெளியான இப்படம் கலவையான விமர்சனங்களை பெற்றது மட்டுமின்றி பாக்ஸ் ஆபீஸிலும் பெரும் தோல்வியை தழுவியது. அதன்பிறகு ஆமிர்கான் எந்த படத்திலும் கமிட் ஆகாமல் இருந்து வருகிறார்.

## தந்தை - மகன் இடையேயான உருக்கமான போராட்டம் நேர்மைக்கும் பாசத்துக்கும் இடையே மோதும் உறவு



நேர்மைக்குப் பெயர்பெற்ற சார்பதிவாளர் தசரத ராமன் (சமுத்திரக்கனி) தனது மகன் ராகவனின் (தன்ராஜ்) தீய வழிப்போக்கால் துயரமடைகிறார். தந்தை-மகன் உறவு இடையே உருவாகும் விரிசல், ஒரு கட்டத்தில் கைமீறி பெரும் மோதலாக மாறுகிறது. மகனின் விருப்பத்தைக் கண்டறிந்த தந்தை அதை நிறைவேற்ற தயாராகும்போது, இது எதற்குச் செல்கிறது? மகன் மாற்றம் அடையுகிறானா என்பதே படத்தின் மையக்கருத்து. உணர்வுபூர்வமான திரைக்கதை குழந்தை வளர்ப்பில் ஏற்படும் சிக்கல்களை கதையின் மூலம் சிறப்பாக சொல்லியிருக்கிறார் இயக்குநர் தன்ராஜ். வழிதவறிய மகனை மீட்பதற்காக போராடும் தந்தையின் வேடத்தில் சமுத்திரக்கனி தனது இயல்பான நடிப்பால் பரவசப்படுத்துகிறார். மகனை மீட்பதற்காக அவர் எடுக்கும் இறுதி முயற்சி, படத்தின் இரண்டாம் பாதியை விறுவிறுப்பாக நகர்த்துகிறது. அம்மாவின் வேதனை, எதிர்மறைக் கதாபாத்திரம் அப்பாவின் போராட்டம் மட்டுமல்ல, கணவன்-மகனுக்கிடையே அல்லாடும் அம்மாவின் வேதனை (பிரமோதினி) ஆழமாகப் பதிய வைக்கப்பட்டிருக்கிறது. எதிர்மறை கதாபாத்திரத்தில் ஹரீஷ் உத்தமன் அதிரடி காட்டியிருக்க, முக்கியமான திரைக்காட்சிகளில் தனது வீரியத்தை வெளிப்படுத்தியுள்ளார். இயக்கத்தில் நேர்த்தி, சிறிய குறைகள் இயக்குநராகவும், கதாநாயகனாகவும் இருக்கும் தன்ராஜ், தனது கதையின் ஓட்டத்துடன் ஒத்திசைவாகச் சென்று பார்வையாளர்களை ஈர்க்கிறார். ஆனால், நாயகி (மோக்ஷா) கதாபாத்திரத்துக்கு உரிய முக்கியத்துவம் தரப்படவில்லை. மேலும், சுனிலின் சிறிய வேடம் பெரிதாக தாக்கம் ஏற்படுத்தவில்லை. காமெடியின் ஒட்டுமொத்த பங்களிப்புதிரைப்படத்தில் சத்யா, பாலிரெட்டி பிருத்திவிராஜ் ஆகியோர் தகுந்த இடங்களில் காமெடியால் சற்றே ஓய்வு தருகிறார்கள். மொத்தத்தில், உணர்வுப் பூர்வமான குடும்ப உறவை உண்மையுடன் கொண்டுவரும் திரைக்கதை, படத்தை விறுவிறுப்பாக நகர்த்துகிறது.

## பெங்களூரு அணியுடன் இன்று பலப்பரீட்சை: வெற்றி நெருக்கடியில் சென்னையின் எஃப்சி



ஐஎஸ்எல் கால்பந்து தொடரில் இன்று (25-ம் தேதி) இரவு 7.30 மணிக்கு பெங்களூருவில் உள்ள ஸ்ரீரா கண்டீரவா மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் பெங்களூரு எஃப்சி - சென்னையின் எஃப்சி அணிகள் மோதுகின்றன. பெங்களூரு எஃப்சி அணி 21 ஆட்டங்களில் விளையாடி, 10 வெற்றி, 4 டிரா, 7 தோல்விகளுடன் 34 புள்ளிகள் பெற்று பட்டியலில் 4-வது இடத்தில் உள்ளது. சென்னையின் எஃப்சி அணி 21 ஆட்டங்களில் விளையாடி 6 வெற்றி, 6 டிரா, 9 தோல்விகளுடன 24 புள்ளிகள் பெற்று 8-வது இடத்தில் உள்ளது. 6-வது இடத்தில் உள்ள மும்பை சிட்டி எஃப்சிக்கும் (32 புள்ளிகள்), சென்னையின் எஃப்சி அணிக்கும் இடையே 8 புள்ளிகள் வித்தியாசம் உள்ளது. இந்த ஆட்டத்தில் பெங்களூரு எஃப்சி வெற்றி பெற்றால் பிளே ஆஃப்சுற்றுக்கு முன்னேறுவதை உறுதி செய்துவிடும். மாறாக சென்னையின் எஃப்சி அணி வெற்றி பெற்றால் அந்த அணி மேற்கொண்டு எஞ்சியுள்ள இரு ஆட்டங்களிலும் வெற்றி பெற வேண்டும். மேலும் மற்ற அணிகளின் முடிவுகளும் சென்னையின் எஃப்சி அணிக்கு சாதகமாக இருக்க வேண்டும். இது நிகழ்ந்தால் சென்னையின எஃப்சி அடுத்த சுற்றில் கால்பதிக்க வாய்ப்பு உருவாகக்கூடும். ஐஎஸ்எல் தொடரில் இரு அணிகளும் 16 முறை நேருக்கு நேர் மோதி உள்ளன. இதில் பெங்களூரு எஃப்சி 9 ஆட்டத்திலும், சென்னையின் எஃப்சி 4 ஆட்டத்திலும் வெற்றி பெற்றுள்ளன. 3 ஆட்டங்கள் டிராவில் முடிவடைந்துள்ளன.

## நடு ஓவர்களில் சுழற்பந்து வீச்சாளர்களை கட்டுப்படுத்தும் வேலையை செய்தேன்: சொல்கிறார் விராட் கோலி




துபாய்: ஐசிசி சாம்பியன்ஸ் டிராபி கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் துபாயில் நடைபெற்ற ஆட்டத்தில் நடப்பு சாம்பியனான பாகிஸ்தானை 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி அரை இறுதிப் போட்டிக்கு முன்னேறியது இந்திய அணி. 242 ரன்கள் இலக்கை துரத்திய இந்திய அணி 45 பந்துகளை மீதம் வைத்து 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. நட்சத்திர பேட்ஸ்மேனான விராட் கோலி 111 பந்துகளில் 100 ரன்கள் விளாசி அணியின் வெற்றியில் முக்கிய பங்கு வகித்தார். ஆட்ட நாயகன் விருது வென்ற விராட் கோலி கூறியதாவது: அரை இறுதி போட்டிக்கு முன்னேறுவதற்கான முக்கியமான ஆட்டத்தில் சிறந்த முறையில் பேட்டிங் செய்ய முடிந்தது நன்றாக இருக்கிறது. ரோஹித் சர்மா விக்கெட்டைஆரம்பத்திலேயே இழந்த ஒரு ஆட்டத்தில் பங்களிப்பை வழங்கியது நன்றாக இருக்கிறது, கடந்த ஆட்டத்தில் கற்றுக்கொண்டதை புரிந்துகொண்டு செயல்பட்டோம். சுழற்பந்து வீச்சாளர்களுக்கு எதிராக மிடில் ஓவர்களில் அதிக ரிஸ்க் எடுக்காமல் ஆட்டத்தை கட்டுப்படுத்துவதே எனது வேலையாக இருந்தது. இறுதி பகுதியில் ஸ்ரேயஸ் ஐயர் விரைவாக ரன்கள் சேர்த்தார். எனக்கும் சில பவுண்டரிகளும் கிடைத்தன. இது எனக்கு வழக்கமான ஒருநாள் போட்டியை விளையாட அனுமதித்தது. என்னுடைய ஆட்டம் குறித்து எனக்கு நல்ல புரிதல் உள்ளது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd s treet, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA.V. Cell-94436 99066